# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,712 — 1941 ம் ௵ மாசி௴ 14 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### சுப்பிறீங்கோட் அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி சுப்ரிம் கோட் நியாயஸ்தலத்திலே மேற் சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மத்தியமாகாணத்தைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1941 ம் ஆண்டு (மார்ச்சு) பங்குனி மாதம் 10 'ந் திகதி யாகிய திங்கட்கிழமை காலமே 10 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ள வர்க ளெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்கா திருக்கக் கடவர்கள்.

கண்டி பிஸ்கால் கந்தோர்,
1941 ம் ௵ மாசி௴ 10 ந் ௳.

ஈ. ரீ. டைசன்,
மத்திய மாகாணப் பிஸ்கால்.

### அறிவித்தல்.

1941 ம் ஆண்டு 7 ம் திகதியின் 8,709 ம் நொ : அரசாங்க கசெற் பத்திரிகை யில் நாலாம் பாகத்தில் 54 ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட, களுத்துறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த தியக்கடுவைக் கிராமத்தில் முற்றுப்பெற்ற 136 ம் நொ: கிராமப்படத்தில் முதலாம் அணைப்பில் 355 ம் நொ : காணித்துண்டைப் பகிரங்கத் தேள்வைக்கு வாங்கலைப்பற்றிய அறிவித்தலில் காணியின் உரித் தாளியின் பெயர் டாக்டர் ஏ. எம். சமரசிங்ஹ (ஏ. எம். அமரசிங்ஹ வல்ல) என்று எடுத்துக்கொள்க.

களுத்துறைக் கச்சேரி,
1941 ம் ௵ (பெபுருவரி) மாசி௴ 11 ந் ௳.

பீ. ஜெ. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

61——J. N. A 1662—111 (1/41

T 1